விலை ரூபா 2/-

# நாணயம்

**Naanayam**

இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சம்மேளன வெளியீடு

FEDERATION OF THRIFT AND CREDIT CO-OPERATIVE SOCIETIES LTD. IN SRI LANKA

மலர் VOL. 4 ★ தை - மாசி JANUARY - FEBRUARY 1990 ★ இதழ் NO. 1

# 'காளான் முளைத்தது போல் சங்கங்கள் உருவாககூடாது'

## - யாழ். மாவட்ட சமாசத் தலைவர்

"யாழ் மாவட்டத்தில் 398 ஐக்கிய நாணய சங்கங்கள் உள்ளன. இவற்றில் 210 சங்கங்கள் மட்டும் மக்கள்நலனை மனதிற்கொண்டு சேவையாற்றி வருகின்றன. ஏனையவை காளான் முளைத்தது போல் உருவாகியுள்ளன. ஐக்கிய நாணய சங்கங்கள் மூலம் பல கடன்களைப் பெற்று பூரண வாழ்வுபெற்று வாழ்வதற்கு வழிகள் உண்டு. இச்சங்கங்கள் சமாசத்தைப் போல் பலருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கியுதவும் வங்கி போல் செயற்படலாம். மகளிர் குழுக்களை உருவாக்கி அவர்கள் ஊடாக பல வேலைவாய்ப்புக்களுக்கும் வழிவகுக்கலாம்.' இவ்வாறு யாழ். மாவட்ட சிக்கன கடனுதவு சங்கங்களின் சமாசத் தலைவர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் அவர்கள் மானிப்பாய் வடக்கு ஐக்கிய நாணய சங்கத்தின் வருடாந்தப்பொதுக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

அதிபர் திரு. ஈ.வல்லிபுரம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சமாசத் தலைவர் மேலும் பேசும்போது "சமாசத்தில் இதுவரை 180 இலட்சம் வரையுண்டு தேசிய வீடமைப்புப் பகுதியும் இதுவரை ரூபா 50 இலட்சம் வரை கொடுத்துள்ளது. ஐக்கிய நாணய சங்கங்கள் இவற்றைக் குறைந்த வட்டிக்குப் பெற்று அங்கத்தவர்களின் வளர்ச்சிக்கு உதவி வரலாம் என்றார்

திரு. கே. தெய்வேந்திரம் தேசிய வீடமைப்பு அதிகார சபை உத்தியோகத்தர் பேசும் போது "சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பகுதியில் 13 கிராம சேவகர் பிரிவிலும் 25 ஐக்கிய நாணய சங்கங்கள் உள்ளன. இவைகளில் பலவறிய மக்கள் மானிப்பாய் வடக்கு ஐக்கிய நாணய சங்க மூலம் வீடமைப்புக் கடன்களைப் பெற்று வருவதில் முதன்மை பெற்றுள்ளனர். கடனகளைப் பெற்றுள்ளவர்கள் மீளச் செலுத்தும் தொகையைக் கொண்டு தான் மீண்டும் மீண்டும் தேசிய வீடமைப்புக் கடனைப் பெற வாய்ப்புண்டு. இச் சங்க நிர்வாகிகள் சிறப்பாக சேவையாற்றி வருகின்றனர்' என்றார்.

மானிப்பாய் பரிஸ் ப.நோ. கூ. சங்கத்லைவர் திரு.எஸ. தர்மலிங்கம் அவர்கள், கூட்டுறவுச் சங்கங்களும் மக்கள் பங்களிப்பும்,, என்னும் தலைப்பில் பேசும் போது ,,பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் பெண்களின் பங்களிப்பு இயலாதிருந்து வருகின்றது. இக்குறையை இத்தகைய சங்கங்கங்கள் நீர்வகிக்க உதவவேண்டும். கூட்டுறவு இயககம் எமது பழைய மூதாதையர்கள் கையாண்டு வந்த வீடு வேய்தல், வேலியடைத்தல், நீர் இறைப்பு போன்ற வேலைகள் மூலம் வளர்ந்து வந்தது. ஆனால் 1942/43 ஆண்டுகளில் ஏற்பட்ட யுத்தகாலத்தில் மேற்கு நாடுகளின், தொடர்புகளால் தற்போதைய சங்கங்கள் பெயர்பெற்று விளங்கக் காரணமாயிற்று. தற்போதைய நாட்டு நிலமைகளை அவதானித்து மக்கள் இலகுவில் குறைந்த வட்டி மூலம் இத்தகைய சங்கங்கள் மூலம் கடன்களைப் பெற்று தம் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழி பிறக்கின்றன: சிறந்த சேவையாற்றி வரும் இச்சங்கத்தை மேலும் சிறப்புற வளர வேண்டும்'. எனக் குறிப்பிட்டார்.

மனிப்பாய் வடக்கு ஐக்கிய நாணய சங்கத் தலைவர் திரு. ஈ. வல்லிபுரம் தனது உரையில் "சங்கங்கள் வளர்வதற்கு ஐக்கியம், 'நாணயம், நம்பிக்கை (–8ஆம் பக்கம் பார்க்க).

# 'நாட்டினுடைய பொருளாதார அபிவிருத்தி அந்நாட்டு மக்களது சேமிப்பு திறமையிலே தங்கியுள்ளது'

" எந்த ஒரு அபிவிருத்தி அடைந்த நாட்டை எடுத்துப் பார்த்தாலும் அந்நாட்டு மக்களது சேமிப்பு திறமையே அந் நாட்டினுடைய வளர்ச்சிக்கு காரணமாக இருப்பதை அவதானிக்கலாம். இன்று உலக நாடுகளில் கைத்தொழிலிற்கு பெயர்போனதும், தொழில்நுட்ப ஆற்றலில் முன்னனி வகிப்பவர்களுமான யப்பான் நாட்டு மக்கள் சேமிப்பதில் முன்னணியில் இருக்கின்றார்கள், யப்பான் நாட்டினது பலமான பொருளாதார அமைப்பிற்கு அந் நாட்டு மக்களின் சேமிப்பே மூல

—8ம் ஆ பக்கம் பார்க்க

## அன்பான வாசகர்கட்கு!

அண்மைக் காலமாக பத்திரிகைகயை அச்சிடும் கடதாசிக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக தை மாதத்திற்கான பத்திரிகையை வெளியிட முடியவில்லை என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றேன். தை, மாசி மாதங்களிற்கான பத்திரிகையாக இப்பத்திரிகை வெளிவருகின்றது

அச்சுக் கடதாசியில் திடீர் விலை ஏற்றத்தினால் பத்திரிகை அச்சிடுவதற்கான செலவுகள் அதிகரிக்கப் பட்டிருக்கின்றது. இருப்பினும் நாணயம் பத்திரிகையின் விலைகள் அதிகரிக்காது, பழைய விலைகளிலேயே உங்களிற்கு விநியோகிக்கப் படுகின்றது. பத்திரிகையில் ஏற்படும் பாரிய நட்டத்தைக் குறைக்க இவ்வளவு காலமும் நீங்கள் தந்த ஒத்துழைப்பை எதிர் காலத்திலும் நல்குவீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

பத்திராதிபர்

★ சிக்கன வாழ்வே சிறந்த வாழ்வு ★

# நாணயம்

## சுவையானது

இலங்கையின் கூட்டுறவு வரலாற்றில் இன்று மிகவும் முக்கியமான இடத்தை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்கள் வகித்து வருகின்றது என்பதை யாரும் மறுக்கமுடியாது. மாண்புமிகு உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் கூட்டுறவைப் பற்றி கூறும் போது "இலங்கையின் கூட்டுறவு ஒரு கேக், அதில் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் ஒரு சிறிய துண்டு, இத்துண்டு மிகவும் சுவையானது" எனக் குறிப்பிட்டிருக்கிறார். இக்கூற்றின் தார்ப்பரியத்தை உலகம் நன்கறிந்துள்ளது.

இத் தன்மையுடைய சிறப்பு வாய்ந்த எமது கடனுதவு சங்க அமைப்பை மென்மேலும் வளர்க்க வேண்டிய பொறுப்பு நம் எல்லோரையும் சார்ந்தது. எமது அமைப்பின் பேரில் சாதி, சமய இன வேறுபாடுகளைக் களைந்து "ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனும் நிலைப்பாட்டிற்கு நாம் வரவேண்டும்.

எமது சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க அமைப்பானது எடுக்கும் அத்தனை நடவடிக்கைகளும் அங்கத்தவர்களது சமூக பொருளாதார அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதை அமைப்பின் செயற்திட்டங்கள் தெரிவாக்கும். இன்று உலக வங்கி வறிய மக்களுக்கான அபிவிருத்தித் திட்டத்தை இலங்கையில் செயற்படுத்துவதற்கு பொருத்தமான நீதி நிறுவனங்களை கண்டறியும் முயற்சியில் இறங்கியுள்ளது. பெரும்பாலும் இலங்கையின் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் உலக வங்கி எதிர்பார்க்கும் குணதிசயங்கள் உடைய ஒரு அமைப்பாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எமது அமைப்பினூடாக உலக வங்கி தனது அபிவிருத்தித் திட்டத்தை செயற்படுத்த விரும்புமாயின் அதற்கு முன்னேற்பாடாக சில தகவல்களை நாம் சமர்ப்பிக்க வேண்டியிருக்கும். எனவே இத் திட்டத்திற்கு மாத்திரமின்றி எப்போதும் எத்திட்டத்தையும் பொறுப்பேற்று செயற்படுத்தக் கூடிய பக்குவ நிலையை நாம் அடைந்திருத்தல் வேண்டும். வருடாந்தத் திட்டங்கள், வரவு செலவுத் திட்டம், போன்றவை உட்பட சங்கத்தின் அபிவிருத்திக்கேற்ற ஒழுங்கு, செயற்திட்டங்கள் யாவும் சங்க, மாவட்ட மட்டங்களில் ஒழுங்குபடுத்தப் பட்டிருத்தல் வேண்டும்.

எமது நோக்கு "இரண்டாயிரம் ஆண்டில் யாவர்க்கும் சி க கூ' என்பதால் இவ் இலக்கை அடைவதற்கு ஏற்ற திட்டங்களை உருவாக்கி நாம் செயற்படல் வேண்டும்.

## 1989-1990 ஆண்டுக்கான உத்தியோகத்தர் தெரிவு

துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள செல்வா சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் 1989.11.10 அன்று மாலை 2 மணிக்கு 4ம் யூனிற் அரசாங்க தமிழ் கலவன் பாடசாலையில் தலைவர் திரு க புண்ணியநாதன் தலைமையில் ஆரம்பமானது.

இக்கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினர்களாக துணுக்காய்ப் பகுதி வெளிக்கள உத்தியோகத்தர் திரு. ச. குகனேஸ்வரன், யோகபுரம் கிழக்கு கிராமசேவையாளர் திரு. எஸ். ஞானேஸ்வரன் ஆதவன் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. கார்த்திகேசு, பிள்ளையார் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க தலைவர் திரு. எஸ். செல்வரத்தினம், பாலசுப்பிரமணியம், சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ் பாலலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு உரை நிகழ்த்தி இவ் விழாவை சிறப்பித்தனர்.

பொதுக் கூட்டத்தின் முக்கிய நிகழ்ச்சியாக 1990 ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு, ஆராயப்பட்டு சபையால் ஏற்றுக்கொண்டு 1989–1990 ஆண்டுக்கான இயக்குனர். தெரிவு நடைபெற்றது. நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு;-

தலைவர் :- திரு. க. புண்ணியநாதன்.
உப தலைவர் :- திரு. ப. தர்மகுலசூரியர்.
செயலாளர் :- திருமதி க ஞானேஸ்வரி.
பொருளாளர் :- திரு. த சத்தியதாசன்
நிர்வாக உறுப்பினர்கள் :- திரு. வீ. கிருஸ்ணராசா.
திரு. ஆ. புண்ணியமூர்த்தி
திருமதி கோ. யோகபத்மவதி.

## மண்முனை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான பயிற்சி வகுப்பு

மண்முனை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான சிக்கனவு கடனுதவு கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கட்கான பயிற்ச்சி வகுப்பு 1989.10.25-ம் திகதி கிரான்குளம் விநாயகர் வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் திரு. எம் சதாசிவம், நிதி உத்தியோகத்தர் திரு. கே. ஜெகநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க அமைப்பு முறை, நோக்கம், போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி உரையாற்றினார்கள். இதில் 50 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். இப் பயிற்ச்சி வகுப்பினை அப்பகுதி உதவிச் செயலாளரான திரு. ஏ. கங்காதரன் ஏற்பாடு செய்ததோடு சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களில் 1990-ம் ஆண்டுக்கான கடன்திட்டத்தை தயாரிப்பது பற்றியும் விளக்கமளித்தார்.

## பழமொழிகள்

1. ஐந்தில் வளையாதது ஐம்பதில். வளையுமா?
2. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
3. ஆருமற்றவள் தாரம், ஊரில் ஒருவன் தோழன்
4. இல்லாதவன் வாய்ச் சொல்லு செல்லாது.
5. ஈயாத புல்லர் இருந்தென்ன போயென்ன.
6. உரலிலகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?
7. ஊர் ஓடில் ஒத்து ஓடு. ஒருவன் ஓடில் கேட்டு ஓடு
8. எட்டிப்பழுதென்ன ஈயாதார் வாழ்ந்தென்ன.
9. ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு.

ம. அருள்தேவி
6-ம் ஆண்டு
ஆலங்கேணி மவி.

## 'தேவைதான் நாணயமே'

"மாதத்தின் ஒரு தடவை,
உரு வெடுக்கும் வேளையிலே

புதுமைபெறும் செய்தியுடன்.
பிரசுரிப்பேன் உங்களுக்கு,

நித்தமும் நடப்பவை,
நினைவாக நான் வைத்து
மலர்கின்ற மலருள்ளே,
சில பக்க வரியுள்ளும்,
புதைத்திடுவேன்,

கவர்ச்சிமிகு வார்த்தைகளை,
என்,
நாணய நேயருக்கு,
நாணயத்தின் நாயம் தான்.
உங்களிடம்,

பணிந்து நானும்
நிற்கின்றேன்.
நானும் ஏன் உங்களை,
நாண வைக்க வேண்டும்,
இது எனக்குத் தேவைதானா,

ஆனால்

நான் உங்களுக்கு,
தேவை தானே

காரைதீவு
உதயன்


## நாணயம்

**கண்டி வீதி, கிளிநொச்சி.**

செய்திப்பத்திரிகை: 'நாணயம்'

ஆசிரியர்:

திரு. எஸ். ராஜரட்ணம் பீ. ஏ.

வெளியீடு:

சி. க. கூ. ச. சம்மேளனம்

பத்திரிகைக் குழு:

திரு. எஸ். கனகசபாபதி

திரு. வி. பெருமாள்


திரு. டி. சண்முகம்


## விளம்பரம்


"நாணயத்தில்" விளம்பரம் செய்ய விரும்பும் சங்கங்கள் சமாசங்கள் அவ்விடயம் சம்பந்தமாக பத்திரிகை ஆசிரியருடன் தொடர்பு கொள்ளவும்.

கூட்டுறவு சங்கங்களிலுள்ள பதவி வெற்றிடங்கள் மற்றும் அறிவித்தல்கள் சலுகைக் கட்டணத்துடன் வெளியிடப்படும்.

மேலதிக தொடர்புகட்கு.
ஆசிரியர் 'நாணயம்'
இ. சி. க. கூ. பிரதேச நிலயம்.
கண்டி வீதி,
கிளிநொச்சி




## குறுக்கெழுத்துப் போட்டி இல: 12




பெயர் : ........... ....................................

முகவரி : .. ........ ....................................

........... ........ .......................................

மாவட்டம் ; ........ ....................................

.......... . ....................

கையொப்பம்

திகதி: ....................

**கவனத்திற்கு:**

★ இப்போட்டியில் மாணவர்கள் சி.க கூ. சங்க அங்கத்தவர்கள் மாத்திரமே கலந்து கொள்ள முடியும்.

★ ஒருவர் ஒரு கூப்பனை மாத்திரமே அனுப்பலாம்.

★ கூப்பன்கள் தபாலட்டையில் ஒட்டப்பட்டு: பாடசாலை மாணவராயின் பாடசாலை முகவரியும், கடனுதவுசங்க அங்கத்தவராயின் சங்க, முகவரியும் குறிப்பிடப்பட வேண்டும். விபரங்கள் குறிப்பிடாத கூப்பன்கள் நிராகரிக்கப்படும்.

★ போட்டி சம்பந்தமான சகல நடவடிக்கைகளுக்கும் ஆசிரியர் குழுவே பொறுப்பாகும்.

★ சரியான விடையை எழுதும் முதலாவது அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 50/- ம், 2வது 3வது, பரிசாக ரூபா 25/ம் வழங்கப்படும்,

★ விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:-

ஆசிரியர், 'நாணயம்'
சி. க. கூ. பிரதேச நிலையம்,
கண்டிவீதி,
கிளிநொச்சி

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 12

இடமிருந்து வலமாக:-

1. .................... நூற்றொருவரில் மூத்தவன்.
2. .................... கடலைகுழம்பியுள்ளது.
3. .................... நளனின் மனைவி குழம்பியுள்ளாள்.
4. .................... மிக உயரத்தில் பறக்கும் பறவை குழம்பியுள்ளது.
5. .................... அவளின் எதிர்ச்சொல்.
6. .................... செவி

மேலிருந்து கீழ்:-

1. .................... திரௌபதையின் துயிலுரிந்தவன்.
7. .................... மூத்த மகன்
8. .................... கள்வன் குழம்பியுள்ளான்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல: 11-ன் சரியான விடைகள்

இடமிருந்து வலம் ;-
01. வரைவற்ற
02. காடு
03. கரை
04. உபவிதி
05. பண்பாடு.
06. ஒடு.

மேலிருந்து கீழ்:-
01. வரைவுள்ள
04. உண்டு
07, வசை
08. பாப்பா
09. விடுதி
10. பதிவேடு

பரிசு பெறும் அதிஸ்டசாலிகள்:-

1வது பரிசு:-
செல்வி ம. அருள்தேவி
ஆலங்கேணி விநாயகர் ம.வி
கிண்ணியா, திருகோணமலை.

2வது பரிசு:-
செல்வி ம. சரோஜா
518,5ம் யுனிட், சி .க. கூ' சங்கம்
யோகபுரம்.

3வது பரிசு:-
செல்வி சா. டிலானி
திருமுறிகண்டி இந்து வித்தியாலயம், முல்லைத்தீவு.

# உங்களுக்குத் தெரியுமா?

ஆங்கில அகராதியை முதன் முதலில் தொகுத்தவர் யார்
சாமுவேல் ஜான்சன்.

நைல் நதிப்போர் எந்த ஆண்டில் நடைபெற்றது?
கி.பி 1798 -ல்

உலகில் பெரிய மிருகக்காட்சிச்சாலை எங்குள்ளது?
தென்னாபிரிக்கா.

பெரிய எரிமலைகள் உள்ள நாடு எது?
யப்பான்.

இந்தியாவில் இராணுவப் படை எப்போது அமைக்கப்பட்டது?
1921-ல்

ஐக்கிய நாடுகள் (ஐ.நா) சபை எப்போது எந்த ஆண்டு நிறுவப்பட்டது?

அ. கோமஸ்பெனுன்டோ
நெடுந்தீவு ம வித்தியாலயம்.

கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நடைபெற்ற முதல் யுத்தம் எது?
சிலுவை யுத்தம்.

உலகில் பரப்பளவில் பெரிய நாடுகள் எவை?
ரஷ்யா, சீனு, கனடா பிரேசில்.

1945ம் ஆண்டு அக்டோபர் 24 தேதி

மேகத்தில் இருந்து மின்னோட்டத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
பெஞ்சமின் பிராங்ளின்.

அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி யார்?
ஜோர்ஜ் வாஷிங்டன்

# மாணவர் சங்கம்

| இல | | |
|---|---|---|
| 95. | சண்முகநாதசர்மா , சிவதர்சினி | – யா/ நாவற்குழி மகாவித்தியாலயம். |
| 96. | சிவசாமி வனஜா | – மு / வித்தியானந்தா கல்லூரி, முல்லைத் தீவு. |
| 97. | அ. முகமது ஜிப்ரி | – அல்/ முனப்பர் அரசினர் முஸ்லிம் வித்தியாலயம், மன்னார். |
| 98. | அ, சிவகுமார் | – மு, வித்தியானந்தாக் கல்லூரி, முல்லைத்தீவு. |
| 99, | சி. மகேஸ்வரன் | – மு. அ. த. க. பாடசாலை , முல்லைத்தீவு |
| 100. | அ. அருள்குமார் | – மு/ வித்தியானந்தாக்கல்லூரி,முல்லைதீவு |
| 101. | தா. மு. யஸாரின் | – ம/ றிஜோசா மன்றில் மூர்வீதி மன்னார் |
| 102. | க, மங்களேஸ்வரி | – க/ இந்து மகாவித்தியாலயம் கிளிநொச்சி |
| 103. | இ, விஜயகௌரி | – இந்து மகா வித்தியாலயம் கிளிநொச்சி |
| 104, | செ. நந்தினி | – திரு முருகண்டி, இந்து வித்தியாலயம் |
| 105. | அ கோமஸ்பனுன்டோ | – யா/ நெடுந்தீவு, மகா வித்தியாலயம் – யாழ்ப்பாணம். |
| 106. | வீ. சிவாஜினி | • யா/கோண்டாவில் கிருஸ்ண மகாவித்தியாலயம். |
| 107. | முகமது ஜிப்ரி | – ம. அ.மு.க. பாடசாலை, மன்னார் |
| 108. | ந. அகிலன் | – அ.த.க பாடசாலை சேமமடு வவுனியா |
| 109. | ந. நகுலன் | – அ.த.க பாடசாலை சேமமடு வவுனியா |

### மாணவர் சங்கம்

இன்று மாணவர் மத்தியிலே உள்ள திறமைகளை வெளிக் கொணர்வதற்கு மாத்திரம் மாணவர் சங்கம் என்ற நிலையை மாற்றி மாணவர்கள் கல்வி கற்கும் காலத்திலேயே சிக்கனத்தை கையாண்டு, சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொடுக்கவும் மாணவர் சங்கங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

இத்தகைய மாணவர் சங்க அமைப்பொன்றை அகில இலங்கை ரீதியாகஅமைத்து அவர்கள் மத்தியிலே உள்ள பல்வேறு திறமைகளை வெளிப்படுத்தவும் சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்தவும் 'நாணயம்'' தீர்மானித்துள்ளது.

இச்சங்கத்தில் 18 வயதுக்கு குறைந்த மாணவர்கள் சேர்ந்து கொள்ளலாம். சேர விரும்புவோர் மாணவர் சங்க விண்ணப்ப கூப்பனை நிரப்பி ஆசிரியருக்கு அனுப்பி வைக்கவும்.

கூப்பன்

## மாணவர் சங்கம்

பெயர் :- ..........................................

முகவரி :- ..........................................

பிறந்த திகதி :- .................... வகுப்பு :- ..........

பாடசாலை :- ..........................................

மாவட்டம் :- ..........................................

கிராமத்திலுள்ள சி. க. கூ. சங்கத்தின் பெயர் :-........

..........................................

மேலே தரப்பட்ட விபரங்கள் சரியானவை. நான் இச்சங்கத்தில் சேர விரும்புகிறேன்.

....................

கையொப்பம்

# திருத்திய தெய்வம்

சிறுகதை

குமரன் நல்ல சிறுவன். அவன் எட்டாம் ஆண்டிற் படிக்கிறான். தாய் தந்தையை இழந்தவன். ஆகவே அவன் மாமன் வீட்டில் வளர்ந்து வருகிறான், படிப்பிலும் விளையாட்டிலும் அவனுக்குத் தான் முதலிடம். ஆகவே அவனைக் கண்டு பொறாமைப்பட்டவர்களுள் சங்கரும் ஒருவன். அவன் பிரபல கோடீஸ்வரனின் மகன்

சங்கர் ஆணவமும், அடங்காதனமும் உடையவன். அவனின் தந்தையார் அவனைத் திருத்துவதற்கும் பல முயற்சிகள் மேற்கொண்டார். அத்தனையும் வீணாகின. அவனது அடங்காதனம் கூடியதே ஒழிய குறையவில்லை. அவன் குமரனுக்குப் பல தொல்லைகள் கொடுத்தான். புத்தகங்களைக் கிழித்து எறிவான். அடிப்பான். இவ்வாறான தொல்லைகள் எல்லாவற்றையும் குமரன் பெருந்தன்மையுடன் பொறுத்துக் கொண்டான்.

கல்லூரியில் சித்திரப்போட்டி நடைபெற இருந்தது. அதற்குச் சங்கரும் குமரனும் விண்ணப்பித்தார்கள். போட்டி நாளும் வந்தது. அன்று மழை பெய்து வீதி சேறும், சகதியுமாக இருந்தது. குமரன் தெருவோரமாக நடந்து வந்தான். அப்போது மிகவும் வேகமாக வந்த கார் ஒன்று அவன் மீது சேறையும், நீரையும், வாரி இறைத்துச் சென்றது. குமரனின் சீருடையும் சித்திரத்தாளும், நன்றாக நனைந்து அழுக்கடைந்து விட்டன குமரன் காரைப் பார்த்தான். இது சங்கருடைய கார் என்பதைக் கண்டபோது இது சங்கரின் விசமத்தனமான செயல் என்று உணர்ந்து கொண்டான். குமரன் ஆடை மாற்ற வீடு செல்வான் திருப்பி வருமுன் போட்டி தொடங்கி விடும் குமரன் கலந்து கொள்ள முடியாது. தனக்கே முதலாம் பரிசு கிடைக்கும் என்று எண்ணி திட்டமிட்டே சங்கர் இதனைச் செய்திருக்கின்றான், என்பது குமரனுக்குப் புரிந்தது. அவன் வீடு திரும்பினான். அவனால் போட்டியிற் கலந்து கொள்ள முடியவில்லை

ஒரு நாள் மாணவர்கள் எல்லோரும் சுற்றுலாவுக்குச் சென்றார்கள். சங்கரும், குமரனும் சுற்றுலாவில் கலந்து கொண்டார்கள். அவர்கள் பல இடங்களையும் சென்று பார்வையிட்டார்கள். இதனால் அவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்

**குமாரசாமி சிவதர்சினி**

சிக்கு அளவேயில்லை, கடற்கரைக்குச் சென்று குளித்து விட்டு மதிய போசனம் உண்பது அவர்களுடைய திட்டம். எல்லோரும் கடலில் இறங்கிக் குளித்தார்கள் சங்கர் உற்சாகத்தோடு வெகுதூரம் நீந்திச் சென்றான். அங்கே சென்ற அவன் தொடர்ந்து நீந்தித் திரும்பி வர முடியவில்லை. அவன் நீந்த முடியவில்லை தத்தளிப்பதைக் கண்ட குமரன் வேகமாக அவனை நோக்கி நீந்திச் சென்றான்: அவனை அணைத்துக் கொண்டு நீந்திக் கரையை அடைந்தான். குமரன் வேண்டிய முதலுதவிகளைச் செய்து அவனது மயக்கத்தைத் தெளிய வைத்தான். சோர்ந்து போய்க் கிடந்த சங்கர் சிறிது சிறிதாக கண்விழித்தான்.

அருகே சோர்வோடும், கவலையோடும், இருந்த குமரனைக் கண்டான். அவன் ஒரு கணத்தில் நடந்தவை அனைத்தையும் உணர்ந்து கொண்டான். குமரனை நன்றியுணர்வோடு பார்த்துப் புன்னகை செய்தான்

"குமரா! நான் உனக்குத் தொடர்ந்து தொல்லைகள் செய்துவந்தேன். நீஅவற்றையெல்லாம் பெரிதுபடுத்தாமல் அமைதியாக இருந்தாய். நான் அறியாமையாலும் ஆவணத்தாலும் செய்த தவறுகளை நீ மன்னித்தாய். அன்று நீ சித்திரப்போட்டியில் கலந்து கொள்ளக் கூடாது என்பதற்காக நானே உன்மீது சேற்றையும் நீரையும் ஏற்றச் செய்தேன். ஆனால் நீயோ என்னை மன்னித்து இன்று ஆபத்து நேரத்தில் என் உயிரையும் காப்பாற்றி விட்டாய்.' 'உயிர் காப்பான் தோழன்' என்ற படி நீ என் உயிர்காத்தாய் இன்று முதல் நீ என் தோழன், வழிகாட்டி என்னைத் திருத்திய தெய்வம் இனிமேல் நான் ஒழுக்கம் உள்ளவனாக இருப்பேன்' என்று சங்கர் அழுது அழுது உள்ளம் கரைந்து கூறினான். நடந்தவை கனவு இனி அவற்றை மறந்து விடு கடவுள் உனக்கு நல்லவழி காட்டுவார்' என்று குமரன் பெரிய மனிதன் போலக் கூறினான்.

மறுநாள் சங்கரின் தந்தை பாடசாலைக்கு வந்தார். அதிபரின் அனுமதியோடு மாணவர் முன்னிலையில் குமரனுக்கு தங்க மோதிரம் ஒன்றை பரிசாகக் கொடுத்தார்.

# ஒரு ஜீவனுக்காக

தன் புத்தகங்கள்எழுது கருவிகள் யாவற்றையும் எடுத்துக் கொண்டு ரேகா தன் அக்காவிடம் சென்று "அக்கா நான் பாடசாலைக்கு போய் விட்டு வருகிறேன்.'' என்றாள். என்னமோ நன்றாய்ப் படித்து பரீட்சையில் சித்தியடைந்து என் மனதைக் குளிரப்பண்ணி, என் ஆசைகளை நிறைவேற்றினால் தான் நிம்மதி'' என்று கூறிக் கொண்டு நன்றாய் படிக்க வேண்டும் என்று கூறி அனுப்பினாள் ரேணுகா.

வறுமையின் மத்தியில் தன் தங்கையை படிக்க வைக்க வேண்டும். என்ற எண்ணத்தில் கஸ்டப்பட்டு உழைத்து சிக்கனத்துடன் வாழ்ந்துவந்தாள் ரேணுகா தங்கை ரேகாவும் தன் அக்காவின் ஆசைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்துடன் இரவும் பகலும் கண்ணோடு கண் மூடாமல் படித்து வந்தாள். ரேகாவிற்கு றஞ்சனி என்னும் பெயருள்ள ஒரு நண்பி இருந்தாள். அவள் ஒரு பணக்கார வீட்டுப் பெண் கஸ்டம் வறுமை என்பது என்ன

**க. இராசேந்திரன்**
**வற்றுப்பளை**

என்று தெரியாதவள். அவள் இதனால் படிக்கும் எண்ணம் இல்லை. நன்றாக சினிமாக்களிலும், விளையாட்டுக்களிலும் பொழுது போக்குவதே அவளுடைய வேலை. ஆனால் ரேகா எந்த நேரமும் படித்துக் கொண்டே இருப்பாள். இது நண்பியான றஞ்சினிக்கோ ஒரு வேடிக்கை போன்று.

ரேணுகா கர்த்தரிடத்தில் தினமும் வேண்டியிருந்தாள். தன் வாழ்க்கையைத் தேவனிடத்திலே அவருடைய பாதத்திலே வைத்துவிட்டாள். தன்னை தேவன் கைவிடமாட்டார். என்பது அவளுடைய விசுவாசமாய் இருந்தது. அவளுடைய விசுவாசத்தின் படி தேவனும் அருள் புரிந்தார். அவள் ஒரு முதலாளியிடத்தில் வேலைக்குச் சென்று கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டு தன் தங்கையின் எதிர்காலத்தை நிர்ணயிக்க எண்ணியிருந்தாள். தன் தங்கையின் எண்ணமும் அது தான் என்று அவளும் வாழ்ந்து வந்தாள்.

ரேகா பரீட்சையும் நெருங்கிக்கொண்டு வருவதைக் கண்டு ஆர்வத்துடன் படித்து வந்தாள். ஆனால் றஞ்சினியோ விளையாட்டில் பொழுதைப் போக்கினாள். பரீட்சையும் நடந்தது. ஒருவாறாக பரீட்சை நடந்து முடிந்ததும், பெறுபேறுகளும் வந்து கிடைத்தன. ரேணுகா தேவன் மேல்வைத்த விசுவாசத்தினாலும், ரேகாவின் முயற்சியாலும், ரேகா சித்தியடைந்து மேற்படிப்பிற்குச் செல்லக்கூடியதாக இருந்தது ஆனால் றஞ்சனியோ சித்தியடைய முடியாமல் போய்விட்டது. இப்போது தான் அவள் தன் நிலையை உணர்ந்து தன் தவறை உணர்ந்தாள். இப்போது தான் அவள் கல்வியின் மகிமையை உணர்ந்தாள்.

ரேணுகா தேவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் தேவன் கொடுத்த அந்தஓய்வு நாளன்று அவள் கால்கள் ஆலயத்தை நோக்கி விறு நடை போட்டது. உள்ளம் நன்றி செலுத்தியது·

6ஆம் பக்கம் பார்க்க

# 'என்னைக் கொல்ல வரும் ஒருவனுக்கு நான்கூறும் அறிவுரை'

வைதீக அவைதீக மதங்களோ அன்றி பிறமதங்களான கிறிஸ்தவம் இஸ்லாம், போன்ற மதங்களால் எதிர்க்கப்படுகின்ற பஞ்சமாபாதங்களான கொலை செய்தல், களவு எடுத்தல் பொய் சொல்லுதல், கள்ளுண்ணுதல் விபசாரம் செய்தல் போன்றவற்றில் கொடிய தொழிலாகிய கொலைத்தொழில் செய்யப் புறப்படும் என் அன்புச் சகோதரனே சற்றுநில், சிறிது சிந்தனை செய், பொறுமை எனும் பூட்கையை கடைப்பிடித்து நான் சொல்வதை சில வினாடிகளாவது கேட்பாயாக;

நீ கொலை செய்யப்புறப்படுகிறாய். ஆனாலும் நீ என்னைக் கொலை செய்து விட்டாய் என்ற நிலையில் வைத்து எண்ணிப் பார்ப்போமானால் அதன் பின் விளைவுகள் அறியவில்லையா? நான் கொலை செய்யப்பட்டால் என்குடும்பம் அழிவுறும் நிலையை அடையும். நீ என் குடும்பத்தை சீரழிக்கச் செய்வதற்காக கொலை செய்தாலும் அதனால் உன் குடும்பமும் பாதிக்கப்படும் அல்லவா? "அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்'' என்பது முதுமொழி இதற்கேற்ப தண்டனை பெற்று சிறையில் வாடவோ அன்றிதூக்கு மேடையில் தொங்கி உயிர் துறக்கவோ உன் குடும்பத்தை காப்பாற்றுவது யார்?

"கேடு நினைப்பார் கெடுவார் என்பதை நீ அறியவில்லையா? மகாபாரத கதையில் வரும் ஒரு சிறுகதையை கேட்பாயாக. பாண்டவர்கள் வனவாசத்தில் இருக்கிறார்கள். அவர்கள் திரும்பி வந்து அரசாட்சியில் ஈடுபட்டாலும் அல்லது தனக்கு எதிராக போர் தொடுத்தாலும் என்பதற்காக துரியோதனன் பன்றி வடிவில் ஓர் அரக்கனை ஏவி விடுகிறான் அவ் அரக்கன் பாண்டவர்களை தேடி காணக்கிடைக்காமையால் தன்னை ஏவிய குழுவை கொல்கிறான்'

**சிவாஜினி சி.**

எனவே சகோதரா கொலை வெறியில் இருந்து விடுபடு. இதற்கு நீ அன்பு என்று கூறும் மந்திரத்தை கடைப்பிடி.

'அன்புற்றமர்ந்த வழக்கென்ப வையகத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு'

அன்பு என்பது இல்லாவிட்டால்தான் உன் இதயமானது சுருங்கிவிடுகிறது. உன் உயிர் போல் மற்ற உயிர்களையும் நினை அப்படி நினைக்கும்போது உயிர் கொலை தவிர்க்கப்படும். நாம் இப்பரலோகத்தில் தான் வேறுவேறானவர்கள் எம் தந்தை ஒரே இறைவன் தானே! கவிமணி பின்வருமாறு கூறுகிறார்.

மன்னுயிரெல்லாம் உலகில்
ஒருதாயின்
மக்களென்ற உண்மை அறிந்
திலீரோ
தன்னுயிர் போற்றி பெரும்
பழி செய்வது
சாண்டோனர் கண்டநெறிய
லவோ?

மனிதப் பிறவி நான் அறி [illegible] பிறவி என்பர். எனவே நாம் மனிதப் பிறவிக்குரிய பண்பினை இழந்து மிருகங்கள் போல் வாழ்ந்து விடலாமா? அப்படியானால் விலங்குகளுக்கும் நமக்கும் இடையே என்ன வித்தியாசம்? இவ் உலகத்திலே உயிர்கள் வாழ்கின்றன என்றால் அதற்கு என்ன காரணம் அன்பு தான். அன்பு என்பது இல்லாவிட்டால் இவ்வுலகைமே சூனியமாகிவிடும். என்னைக் கொல்வதால் நான் மட்டும் தான் சாவேன் என நினைக்காதே என்னை நம்பி இருப்பவர்களும் உடன் கட்டை ஏறுவார்கள்; இதனால் எத்தனை மனிதஉயிர் இழப்பு சற்று சிந்தித்துப் பார்! நான் படித்துச் சுவைத்த கதை ஒன்று சொல்கிறேன். அழகான ஒரு வெள்ளை ரோஜாவைப் பார்த்து கிளி கேட்டதாம் நான் உன்னை நேசிக்கிறேன். என்று அதற்கு ரோசா சொன்னதாம்

— 6ஆம் பக்கம் பார்க்க



சிச

தை

| ஞா | தி | செ | பு | வி | வெ |
|---|---|---|---|---|---|
| * | 1 | 2 | 3 | 4 | 5 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 28 | 29 | 30 | 31 | * | * |

வைகாசி

| ஞா | தி | செ | பு | வி | வெ |
|---|---|---|---|---|---|
| * | * | 1 | 2 | 3 | 4 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 27 | 28 | 29 | 30 | 31 | * |

புரட்டாதி

| ஞா | தி | செ | பு | வி | வெ |
|---|---|---|---|---|---|
| 30 | * | * | * | * | * |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 |

நேரம்

## ...னுக்காக

ரேணுகா கர்த்தரிடத்தில் தினமும் வேண்டியிருந்தாள். தன் வாழ்க்கையைத் தேவனிடத்திலே அவருடைய பாதத்திலே வைத்துவிட்டாள். தன்னை தேவன் கைவிடமாட்டார். என்பது அவளுடைய விசுவாசமாய் இருந்தது. அவளுடைய விசுவாசத்தின் படி தேவனும் அருள் புரிந்தார். அவள் ஒரு முதலாளியிடத்தில் வேலைக்குச் சென்று கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டு தன் தங்கையின் எதிர்காலத்தை நிர்ணயிக்க எண்ணியிருந்தாள். தன் தங்கையின் எண்ணமும் அது தான் என்று அவளும் வாழ்ந்து வந்தாள்.

ரேகா பரீட்சையும் நெருங்கிக்கொண்டு வருவதைக் கண்டு ஆர்வத்துடன் படித்து வந்தாள். ஆனுல் றஞ்சினியோ விளையாட்டில் பொழுதைப் போக்கினுள். பரீட்சையும் நடந்தது. ஒருவாருக பரீட்சை நடந்து முடிந்ததும், பெறுபேறுகளும் வந்து கிடைத்தன. ரேணுகா தேவன் மேல்வைத்த விசுவாசத்தினுலும், ரேகாவின் முயற்சியாலும், ரேகா சித்தியடைந்து மேற்படிப்பிற்குச் செல்லக்கூடியதாக இருந்தது ஆனுல் றஞ்சனியோ சித்தியடைய முடியாமல் போய்விட்டது. இப்போது தான் அவள் தன் நிலையை உணர்ந்து தன் தவறை உணர்ந்தாள். இப்போது தான் அவள் கல்வியின் மகிமையை உணர்ந்தாள்.

ரேணுகா தேவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் தேவன் கொடுத்த அந்தஓய்வு நாளன்று அவள் கால்கள் ஆலயத்தை நோக்கி வீறு நடை போட்டது. உள்ளம் நன்றி செலுத்தியது.

6ஆம் பக்கம் பார்க்க

## ...ம் அறிவுரை'

பண்பினை இழந்து மிருகங்கள் போல் வாழ்ந்து விடலாமா? அப்படியானுல் விலங்குகளுக்கும் நமக்கும் இடையே என்ன வித்தியாசம்? இவ் உலகத்திலே உயிர்கள் வாழ்கின்றன என்ருல் அதற்கு என்ன காரணம் அன்பு தான். அன்பு என்பது இல்லாவிட்டால் இவ்வுலகைமே சூனியமாகிவிடும். என்னைக் கொல்வதால் நான் மட்டும் தான் சாவேன் என நினைக்காதே என்னை நம்பி இருப்பவர்களும் உடன் கட்டை ஏறுவார்கள். இதனுல் எத்தனை மனிதஉயிர் இழப்பு சற்று சிந்தித்துப் பார்! நான் படித்துச் சுவைத்த கதை ஒன்று சொல்கிறேன். அழகான ஒரு வெள்ளை ரோஜாவைப் பார்த்து கிளி கேட்டதாம் நான் உன்னை நேசிக்கிறேன். என்று அதற்கு ரோசா சொன்னதாம்

— 6ஆம் பக்கம் பார்க்க



# நாணயம்

## Naanayam

### சிக்கன வாழ்வே சிறந்த செல்வம்

# சி. க. கூ. 1990 TCCS DESK CALENDAR

**தை**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| * | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | * | * | * |

**மாசி**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| * | * | * | * | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | * | * | * |

**பங்குனி**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| * | * | * | * | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

**சித்திரை**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | * | * | * | * | * |

**வைகாசி**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| * | * | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | * | * |

**ஆனி**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| * | * | * | * | * | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 53 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

**ஆடி**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | * | * | * | * |

**ஆவணி**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| * | * | * | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | * |

**புரட்டாதி**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 30 | * | * | * | * | * | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

**ஐப்பசி**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| * | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | * | * | * |

**கார்த்திகை**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| * | * | * | * | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | * |

**மார்கழி**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | * | * | * | * | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

**இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சம்மேளனம்**

Federation of Thribt & Credit Coopertive Societies lt. in Sri lanka

இல: 3/3 எட்மன்டன் ரோட், கொழும்பு - 06 - No. 3/3 Edmonton Road, Colombo - 06

சிகசூ பிராந்திய நிலையம்; கண்டிவீதி, கிளிநொச்சி - TccsRegional Centre, Kandy Road, Kilinochch!.

சிகசூ கல்வி வளாகம், பரகம்மன, கேகாலை - Tccs Education Campus, Paragammana, Kegalle

## நேரசூசி

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

**இடைவேளை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

# ரிககூ பிரதேச நிலைய பயிற்சி வகுப்புக்களிலிருந்து........

## ஸ்தாபனத்தின் அதிகாரி தொழிலாளி தொடர்புகளும் மனிதாபிமான தொடர்புகளும்

## Human Relations in Organisation

ஒரு ஸ்தாபனத்திற்குப் பலதரப்பட்ட மக்கள் பலவிதமான பின்னணியுடன் வருவார்கள். அவர்களுடைய நடத்தையும் வித்தியாசப்படும் முகாமையாளர்களாகிய நாங்கள் எங்கள் நல்ல குறிக்கோளைப் புகுத்துவதற்கு எங்கள் ஸ்தாபனத்தில் வேலைசெய்வோர்களை நன்னெறிப்படுத்த வேண்டும்ஒரு ஸ்தாபனத்தில் கடமையாற்றும் ஊழியர்களின் நடத்தையை ஸ்தாபன, நடத்தை, என அழைப்போம். இந் நடத்தை இருவகைப்படும்.

(1) தனிநபர் நடத்தை நோக்கம் அறிவு (ஞானம்), தகைமை
(2) குழு நடத்தை குழுக்களின் செயற்பாடு, பங்களிப்பு, இன்னும் பல.

மற்றவர்களைக் கொண்டு திறம்பட வேலையை நடாத்தி முடிப்பதுதான் நிர்வாகியின் கடமை இதை எவ்வாறு செய்யலாம்? மற்றவர்களுடைய செயற்பாடுகளை இவர்கள் எவ்வாறு கட்டுப்படுத்த முடியும்? இவர்கள் சம்பிரதாய பூர்வமாகத் தங்களிடம் உள்ள சக்தியையும் அதிகாரத்தையும் பிரயோகித்தே கடமைகளைச் செய்வித்தார்கள் அவர்கள் தங்களுக்குக்கீழ் வேலைசெய்பவர்களிடம் கட்டளைகளைப் பிறப்பித்து அதிகார பூர்வமாக வேலைகளை வாங்குகிறார்கள் நிர்வாகிகளிடம் எதேச்ச அதிகாரம் இருந்தமையினால், ஊழியர்கள் அவர்கள் இட்ட கட்டளைகளை தங்குதடையின்றி நிறைவேற்றினார்கள் நிர்வாகிகள் கடுமையான முறையைக் கடைப்பிடிப்பதனால் தொழிலாளிகள் சந்தோசமாக முழுமனவிருப்பத்துடன் செயற்பட இயலாது. விருப்பமின்றி வேலைசெய்வதனால் அவர்களிடமிருந்து உண்மையான உழைப்பையும் திருப்தியையும் பெற முடியாது. இதனால் உற்பத்தி குன்றும்

தொழிலாளர்களது மனப்பூர்வமான விருப்பத்தை முகாமையாளர்கள் எவ்வாறு பெறலாம் இதற்குச் சுலபமான விடை (HUMAN RELATIONS) 'மனிதாபிமானத் தொடர்பு, அதாவது தொழிலாளியும் முகாமையாளரைப் போல ஒரு மனிதர்தான் அவனிற்கும் தன்னைப்போன்ற மனைவி, மக்கள், ஆசாபாசங்கள் உண்டு. உற்பத்தியில் பெரும் பகுதி வருமானத்தை தொழிலாளிகளுக்கும் பகிர்ந்து அளிக்கவேண்டும். என்றும் அவர்களையும் சமுதாயத்தில் ஒரு மனிதனாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று உணரும் போது இதை முகாமையாளர்கள் புரிந்து கொண்டால் தொழிலாளர்களுடன் நெருங்கிய தொடர்பு வைப்பது மட்டுமன்றி உற்பத்தியையும் தரமாகப் பெருக்கலாம்.

ஒரு ஸ்தாபனத்தில் முகாமையாளர்கள் தொழிலாளி மூன்றுவிதமான சகாக்களுடன் நல்ல தொடர்பு வைத்துக் கொள்ளுதல் அவசியம். அவை யாவன:

(1) மேலதிகாரி
(2) பிரபுக்கள் (வசதி வாய்ந்தவர்கள்)
(3) தொழிலாளி

இம் மூன்று வகைப்பட்ட அதிகாரி-தொழிலாளி தொடர்பை "ஏற்றத்தாழ்வற்ற தொடர்பு' (INTER-PERSONAL RELTIO– SHIP) என அழைக்கப்படும். இப்படியான தொடர்புகளை விருத்திசெய்யும் பட்சத்தில் ஸ்தாபனத்தில் உள்ள எல்லாத்தரப்பட்ட ஊழியர்களிடமிருந்தும் ஒத்துழைப்பைப் பெறலாம். ஒரு ஸ்தாபனத்திலே பலதரப்பட்ட பல குணாதிசயங்களைக் கொண்ட மக்களை எதிர்நோக்க நேரிடும். இவற்றில் மிக முக்கிய மூன்று வகையான

உதாரணமாக கொழும்பு மாநகரிலே திருராம். என்பவர் ஒரு தொழிற்சாலையில் ஊழியனுகக் கடமை யாற்றினார். அவருக்கு 12 பிள்ளைகள் பெறும் ஊழியமோ போதாது. ஒரு நாள் மதிய போசனத்திற்குப் பின்பு அவர் தள்ளாடித் தள்ளாடித் தெழிற்சாலைக்கு வந்தார் மேல்மாடியில் நின்று அவதானித்த அதிகாரிகள் அவர் மது அருந்திவிட்டு வருகிறார். அவருக்கு தக்க தண்டனை வழங்க வேண்டுமென முடிவு எடுத்து விட்டார்கள். இதை அறிந்த நான் ராம் அவர்களை அணுகி, காரியாலயக் கடமை நேரத்தில் மது அருந்துவது தப்பு அதிகாரிகள் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஆயத்தங்கள் செய்கிறார்கள்' என்றேன். கூறி முடிப்பதற்குள் அவரை வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக அனுப்பும்படி அதிகாரியின் கட்டளை பிறந்தது.

உண்மையில் நடந்தது என்ன?

தீர்வு என்ன.....?


சட்டம் ஒருபுறமிருக்க அதிகாரிகள் கண்மூடித்தனமாக ஒரு முடிவுக்கு வருவது சரியானதா? இவ்வாறு நடந்தால் அதிகாரி– தொழிலாளி உறவு எவ்வாறு பலப்படும்? தரமான உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தொழிலாளிக்கு மனம்வருமா?

அதிகாரியானவர் திரு. ராம் அவர்களுடைய குடும்ப சூழ்நிலையைப்பற்றி அறிந்து வைத்திருந்தாரேயானால் அவசரமுடிவு எடுத்திருக்கமாட்டார் ஆகையினால் முதலாளியானவர் ஒவ்வொரு தொழிலாளியைப் பற்றியும் எல்லா விபரமும் காரியாலயத்திற் சேகரித்து வைத்து அவரதுகோவையை உடனே படித்திருப்பாரேயானால் சரியான முடிவு எடுத்திருப்பார்? அதிகாரியின் காரியாலயத்தில் திரு. ராம்

**எஸ் சிவராஜலிங்கம்**
தலைவர்-கே. டி. ஆர். ஆர். ஓ.
கிளிநொச்சி

அவர்களின் விபரக்கோவை இல்லாதிருந்தால் (1) காரி, யாலயம் திறம்பட இயங்கவில்லை. (2) விபரக்கோவை இருந்தும் தான் கண்டதே உண்மை என முடிவுகட்டி வைத்திய அதிகாரியிடம் அனுப்பியது, அதிகாரியினால் சரியான தீர்மானத்திற்கு வரமுடியாது என்பதையும் அவரது எதேச்ச அதிகாரத்தையும் பிரதி பலிக்கிறது. (3) அதிகாரி – தொழிலாளி

(7 ஆம் பக்கம் பார்க்க)




### என்னைக்....

"நான் எப்போது சிவப்பாக மாறுகிறேனே அப்போதுதான் நான உன்னை நேசிப்பேன்" என்றது. இதனால் மனமுடைந்த கிளி தனது இறகுகளை ரோஜா முட்செடியில் அடித்து தனது உதிரத்தை ரோஜாவின் மேல் ஊற்றியது இதனுல் ரோஜா சிவப்பாக மாறிக்கொண்டு வரும்போது கிளி இறந்து விட்டது. இந்தப் பிரிவைத் தாங்க முடியாத ரோஜாவும் தன்னைத் தானே அழித்து கொண்டது. இதில் இருந்து அன்பு என்பது மக்களின் மனதில் எவ்வாறு போற்றப் படுகிறது என்பதை யோசித்துப்பார்

பஞ்சதந்திரக் கதைகளில் வரும் ஒரு குட்டிக் கதையையும் ஒருமுறை நன்ருகக் கேட்பாயாக. மழை சோவைப் பெய்கிறது மரத்தின் மேல் ஒரு பெண்புரு அமர்ந்துள்ளது தனது நாயகனைத் தவற விட்டு விட்டது. அவர் எங்கு சென்ருரோ? வேடரின் வலையில் சிக்குண்டாரோ? என எண்ணுகிறது. அப்போழுது ஒரு வேடன் குளிரால் நடுங்கியபடி அம் மரத்தின் கீழ் ஒதுங்குகிருன். கூட்டில் உள்ள ஆண் புரு தனது நாயகியின் புலம்பல் கேட்டு என் பிராண நாயகியே ஒரு விருந்தினர் நம்மிடம் வந்துள்ளாள். அவளிற்கு. விருந்திடு என்கிறது உடனே பெண் புரு தீயை எழுப்பி அதனுள் விழுந்து வெந்து போகிறது. இதனைக்கண்ட வேடன் ஆண் புருவிடம் மன்னிப்புக் கேட்கிருன். அதற்கு ஆண் புரு என் நாயகிபோய் விட்டாளே எனவே எனக்கு இவ் வையகத்தில் அலுவல் இல்லை என்று தானும் தீயில் விழுகிறது. துயர்கொண்ட வேடன் தீயில் விமுந்துதானும் மாய்கிருன். "புருக்கள் பின்னே வேடன் முன்பே தேவனுகி'விட்டான்' இதில் இருந்து மறுமையின் இன்பமான சொற்கத்தை அடைவதற்கு கொலைததொழிலைக் கைவிடுவாயாக.

சகோதரன் என்ற நிலையில் இருந்து அதன் பின்னுல் நண்பன் என்ற நிலைக்கு மாறிய தோழா நான் இவ்வளவு நேரமும் கூறிய அறிவுரையைக் கேட்டு உனது நெஞ்சத்தை புண் படுத்தி இதற்கு அடக்கம் எனும் பண்பைக்கைக்கொள்.

"காக்க பொருளாவடக்கத்தையாக்க மனிதனுங் கில்லை உயிர்க்கு"

என்ற குறளுக்கு இணங்க வாழப்பழகிக்கொள்! உனது எண்ணமாகிய கொலைத்தொழிலைத் தவிர் கொலை' செய்வதால் புலையார் என்றோ பஞ்சமர் என்றோ வீண் பழிப்புரைகளை கேட்காதே. இப்பிறவியில் மட்டும் அல்ல மறுபிறவிக்காக நீ பயணம் செல்லும்போது அங்கு மீளா நரகத்தையே அடைவாய் எனவே வீண் பழியை தேடாது என்னை சொல்லாதொழிக.

### ஒருஜீவனுக்காக ..

மீண்டும் கால்கள் வீட்டை நோக்கி வீறு நடைபோட்டது. அவள் மீண்டும் தன் முதலாளியிடம் சென்ருள். தன் தங்கை மேல்படிப்புப் படிக்கப் போகிருள். இதற்குச் சிறிது பணஉதவி செய்யுமாறு கேட்டுக்கொண்டாள். அவள் நிலையை உணர்ந்து மீண்டும், ஒரு தொகைப் பணத்தைக் கொடுத்தார். நன்றி கூறிக் கொண்டு வீடு வந்த அவள் அந்தப்பணத்தை அவள் தங்கையிடம் கொடுத்து தன் நிலையைக் கூறி தன் வறுமையையும் கூறி மிகவும் சிக்கனத்துடன் படிப்கை பார்த்து கற்புள்ளவளாக வாழும்படி புத்திமதி கூறி தேவனிடம் வேண்டுதல் செய்துகொண்டு அனுப்பி விட்டாள்.

காலங்கள் உருண்டன அவள் படிப்பும் முடிந்தது. மிகவும் சிக்கனத்துடன் ஊக்கத்துடன் படித்து தேர்ச்சியுடைந்து மகிமையுடன் வீடு வந்து சேர்ந்து தன் அக்கவின் ஆசைகள் யாவற்றையும் நிறைவேற்றி விட்டாள்.

அவளுக்கு அப்பாவும், அம்மாவுமாக இருந்து அவளைப் படிப்பித்து ஆளாக்கி விட்டு, அவளுக்கு நல்லதொரு வேலையும் வாங்கிக் கொடுத்துக் கொண்டிருந்த வேளையில் மரணம் அவளை இருகரம் நீட்டி அழைத்தது. ஒரு ஜீவனுக்காக தன் வாழ்க்கை முழுவதையும் ஒப்படைத்த அவளுக்காக ஏங்கி நிற்கிருள் தங்கையவள்.

## "பொருள் ஆதார உதவி"

அண்மையில் நாணயத்தில் முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்ளின் சமாசத்தலைவர் திரு ச. சிவானந்தம் அவர்கள் தெரிவித்த கருத்துப்படி தையல் இயந்திரக் கடனுதவி பல வேலையற்ற யுவதிகள் பலனடைந்து வருகின்றனர். மீன்பிடி உபகரணங்கள் கிடைக்கப்பெற்றவர்களுக்கும் எதிர்பார்த்த அளவு அபிவிருத்தி கண்டுள்ளனர். இந்த அடிப்படையில் நீரிறைக்கும் இயந்திரத்திற்கான கடன் உதவியும் பெருமளவு பொருளாதார நன்மை அளிக்கக் கூடியதும், வறிய கிராம விவசாய அங்கத்தினர்கள் தங்களின் வறுமைப்பிடியிலிருந்து விடுபட வழியமைக்கக் கூடியதுமாகும். இது போன்ற விவசாய உபகரண உதவிகள் (கடன்) கிடைக்க மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்கு விநாயக புரம் மேற்கு சிவனொளி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் நாணயம் மூலம் தனது ஆதரவையும் விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

ப. சச்சிதானந்தம்

## வாழ்க்கை

சென்ற மாதத்தின் தொடர்ச்சி ........

07. வாழ்க்கை ஒரு கண்ணாடி
மிளிர வேண்டும்.
வாழ்க்கை ஒரு மின்குமிழ்
ஒளிர வேண்டும்.

08. வாழ்க்கை ஒரு கலாசாலை
கற்க வேண்டும்.
வாழ்க்கை ஒரு பள்ளிக்கூடம்
பயில வேண்டும்.

09. வாழ்க்கை ஒரு வனுந்தரம்.
வனப்பு இங்கு வேண்டும்
வாழ்க்கை ஒரு நீரோடை
செழிப்பு இங்கு வேண்டிம்.

10. வாழ்க்கை ஒரு களர் நிலம்
களனியாக வேண்டும்.
வாழ்க்கை ஒரு தளர் நடை
மனதில் உறுதி வேண்டும்,

11. வாழ்க்கை ஒரு நாடக அரங்கம்
நடிக்க வேண்டும்.
வாழ்க்கை ஒரு பொய் வேசம்
கலைய வேண்டும்.

12, வாழ்க்கை ஒரு விளை நிலம்
வளப்படுத்த வேண்டும்
வாழ்க்கை ஒருவயல் நிலம்
களை பறிக்க வேண்டும்.

(வாழ்க்கை தொடரும்)

து. சிவகுமார்
பரந்தன்.

## மனிதனுக்குத் தேவையானவை சோர்வற்ற இறைவழிபாடும், சோர்வற்ற உழைப்பும்.

இரண்டு தவளைகள் ஒரு பெரிய தயிர் சட்டிக்குள் வீழுந்து விட்டன வெளியே வருவதற்கு அவை எத்தனையோ தடவை முயற்ச்சித்தன. முடியவில்லை. ஒன்று மிகச் சோர்ந்து போகவே தன் துயற்சியைக் கைவிட்டு அப்படியே அழிந்து போனது. மற்றத் தவளையோ விடாமல் தயிரின் மேல் தன் கால்களை அடித்து, அடித்து முயற்சி செய்தது. சில மணி நேரம் கழிந்தது. தவளை தயிரைத் தொடர்ந்து அடித்துக் கொண்டே இருந்தபடியால், வெண்ணெய் உருவாகி ஒரு பெரிய பாளமாக மிதந்தது. இதைக் கண்ட தவளை அந்த வெண்ணைக் கட்டியின் மேல் ஏறி சுலபமாக வெளியிலே குதித்து விட்டது. சோர்வு மனதைத் தளரப் பண்ணும், முடிவில் தோல்வியைக் கொண்டு வரும். விடா முயற்ச்சியோ ஜெயத்தைத் தரும்.

சோர்ந்து போகாமல் தியானம் செய்.
சோர்ந்து போகாமல் ஊழியம் செய்.
சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்.

## உத்தியோகத்தர்கள் துறைநீலாவணை சிககூ சங்கம் துறைநீலாவணைமட்டக்களப்பு

தலைவர் :- திரு. கா. சத்தியமூர்த்தி
உபதலைவர் :- திரு. மு. ஆறுமுகம்,
செயலாளர் :- திரு சா. மாமாங்கம்
பொருளாளர் :- திரு. மு. பிள்ளையான்தம்பி.

நிர்வாகசபை உறுப்பினர்கள்;-
திரு. த. சீனித்தம்பி
திரு. செ தருமரெத்தினம்
திருமதி கோசலை பூபாலசிங்கம்
திருமதி சோதிமதி முருகையா.

### அக்கரைப்பற்று மேற்கு விவசாய சி.க.கூ சங்கம் அக்கரைப்பற்று

தலைவர்;-ஏ. எம். அகமட்லெவ்வை
உப தலைவர்:- ஏ. எம். வருசீம் (ஆசி)
பொதுச் செயலாளர்:- எம். ஏ. வதுமா லெப்பை
தனுதிகாரி:- ஏ. எம் ஏ. காதர்
நிர்வாக சபை உறுப்பினர்;-ஏ. பி. எம் வருசிம்
எம்' எம். எம், இஸ்மாயில்

## பாடம் படியடா

காலை எழுந்து படியடா,
கருத்தாய் பாடம் படியடா,
வேலை உணர்ந்து செய்யடா
வீணும் பொழுதைத் தவிரடா
அன்பு பண்பு பேணடா,
அயலார் தம்மை மதியடா,
துன்பஞ்செய்தல் விலக்கடா
துணைசெய முந்திறில்லடா
வீட்டோர் மெச்ச நடவடா
மேலோர் போற்ற நடவடா
நாட்டில் வாழப்பழகடா
நலமும் புகழும் வருமடா
கூட்டுறவுச் சங்கத்தில்
சேரடா
கூட்டங்களுக்கு தினமும்
செல்லடா,
வழங்கும் கடனை வாங்கடா
வட்டியுடன்திருப்பிக் கட்டடா
நாணயப் பேப்பரை
வாங்கடா,
நன்ருய்ப் பார்த்து வாசியடா,
நன்நெறி புகழ் கூறடா.
நற்புகழ் கூறி வாழ்த்தடா

க. ஜெயரூபி
மாங்குளம் மகாவித்தியாலயம்.

## சிககூ......

உறவை உதாசீனம் செய்து விட்டார்.

தனது ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கு தொழிலாளிகளே காரணம் என்ற நோக்கும் அவர்களுடன் நெருங்கிய மனிதாபமான தொடர்பும் வைத்திருக்க வேண்டும் எனக் கருதியிருந்தால் அதிகாரியான அவர் தள்ளாடிவந்தற்கு காரணம் என்ன என்பதை கண்டறிந்திருப்பார். திரு. ராமைத் திருத்துவதற்கு மாற்று வழி என்ன என்பதைச் சிந்தித்து இத் தொழிலாளி தன்னுடன் உரையாட ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்திருந்தால், தப்பபிப் பிராயம் ஏற்பட்டிருக்காது.

அதிகாரிகள் தங்கள் தொழிலாளிகளுக்கு, அவர்களது பிரச்சினைகளை கேட்டறிவதற்குப் பொறுமையாக ஒரு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். இவ்வாறு செய்யும்பட்சத்தில் சரியான தீர்மானம் எடுக்க முடியும். இதற்கு,

(1) அனுபவம்
(2) சரியான தீர்ப்பு வழங்கும்முறை
(3) திறமை
(4) தெளிந்த நல்லறிவு வேண்டும்,

மனிதாபிமானத் தொடர்புகள்

(1) கௌரவித்தல் திருப்தி- அர்ப்பணித்தல்- குழு ஒற்றுமை
(2) ஏற்றுக் கொள்ளுதல்
(3) பொறுப்பு.

உற்பத்திப்பெருக்கம் திறமை

ஒரு ஸ்தாபனத்தில் நிர்வாகிகள் தொழிலாளிகளுடன் நல்ல தொடர்புகள் வைப்பதற்கு நல்ல முறையான தலைமைத்துவம், உத்தேசம்,செயல்திறன் கொண்டிருக்க வேண்டும்.

### அருவி மகளிர் சி. க. கூ. சங்கம் கல்விளான் துணுக்காய்

தலைவர்:- செல்வி பொ. தனலட்சுமி
உபதலைவர்:- திருமதி ஸ்ரீ. வைகுந்தராணி
செயலாளர்:-திருமதி மா. மகிழம்மா
பொருளாளர்:- செல்வி ப. இராசம்மா
நிர்வாக உறுப்பினர்:-
திருமதி இ. திருமங்களம்
செல்வி மா. மாலினிதேவி
திருமதி இ. வசந்தாதேவி

### காயான்கேணி தமிழ் சிக்கன கூட்டுறவுச் சங்கம். காயாண்கேணி.

தலைவர்;- செல்வன். க. தயாளன்
உபதலைவர்;- திரு மா. சிறில்
செயலாளர்;- திரு க. தங்கத்துரை
பொருளாளர்;- திரு நா. கமலநாதன்
நிர்வாக உறுப்பினர்:-
திரு சி. கந்தசாமி
திரு நா. வயிரமுத்து
திரு செ. திருஞ

### மிருவோடைத் தமிழ் சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் வாழைச்சேனை

தலைவர் :- திரு, சின்னத்துரை பிள்ளையான்.
உப தலைவர் :- திரு. மாசிலாமணி இராசரெத்தினம்
செயலாளர் :- திரு. கதிரவேலு நல்லரெட்ணம்
பொருளாளர் :- திரு. குமாரசாமி இளையதம்பி
நிர்வாக சபை உறுப்பினர்கள்.-
திரு. பாலிப்போடி மனோகரன்
திருமதி சிதம்பரப்பிள்ளை விமலாதேவி
செல்வன் கந்தசாமி இராமநாதன்
எண்பார்வையாளர்கள்:-
திரு. நாகலிங்கம், விநாயகமூர்த்தி
திரு. பாக்கியராசா, இருதயநாதன்

### ஸ்ரீ வீரகத்தி விநாயகர் சி. க. கூ .ச. கரைச்சிக்குடியிருப்பு முல்லைத்தீவு

தலைவர் :- திரு. ஆ கிருஸ்ணசாமி
உப தலைவர் :- திரு. சு மகேஸ்வரன்
செயலாளர் :- திரு கனகசூரியர்
பொருளாளர் :- திரு; ந மகாலிங்கம்
உறுப்பினர்கள் :-
திரு. சு சிவசுந்தரம்
திரு. ந, ஜெகதீஸ்வரன்
திரு. [illegible] கந்தையா

# நாணயம்

தை - மாசி
மலர் ; 4
இதழ் 1
விலை ; ரூ 2/-


# 'எனது அயல்வீட்டில் விளக்கு எரியவில்லை! அவ் வீட்டுக்கு என்னுல் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும்'

## — பிராந்திய பணிப்பாளர்

''நாம் இன்று பலவிதமான அரச, அரச சார்பற்ற நிறுவனங்களை காண்கிறேம் அவற்றுடன் வேலை செய்கிறேம், ஒவ்வொரு அமைப்பும் தத்தமக்கென நோக்குகளையும், செயற்பாட்டுத் திட்டங்களையும் கொண்டிருக்கின்றன. இந்த அடிப்படையில் இலங்கையில் இயங் கும், அல்லது உலகெங் கும் இயங்கி வரும் சிக்கன கடனுதவு சங்கங்கள் ''நல்லதோர் அமைப்பு என பதையும், மக்களால் ஆரம்பிக்கப்பட்டு அவர்களால் நிர்வாகிக்கப்பட்டு வருகின்றது. மக்களோடு, அவர்களது வாழ்க்கையோடு, அன்ருட வாழ்க்கையின் ஒரு நடவடிக்கையாக கலந்து விட்ட, மக்களுடன் இரண்டறக் கலந்த ஒரு அமைப்பு என்பதையும் காலம் பதில் சொல்லிக் கொண்டு வருகிறது'

இவ்வாறு திருகோணமலை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க சமாசத்தினுல் ஒழுங்கு செய்யப்பட்ட ''திருகோணமலை, தம்பலகாமம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள சங்கங்களின் நிர்வாகக் குழுவினருக்கான கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளன பிரதேச நிலையப் பணிப்பாளர் திரு. எஸ்' இராஜரெட்ணம் குறிப்பிட்டார்.

திருகோணமலை மாவட்ட சமாச உபதலைவர் திரு எஸ் வாமதேவன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் தொடர்ந்து உரையாற்றிய பிரதேச பணிப்பாளர் 'நாம் எல்லோரும் இந் நாட்டு குடிமக்கள்; ஒவ்வொருவரும் சமூகத்தின் ஓர் அங்கமாகப் பிறக்கிறேம்; வாழ்கிறேம்; இறக்கிறேம்; இதனுல் நாம் பிறந்த சமூகத்திற்கு என்ன லாபம்? 'நான் எனது சமூகத்திற்கு என்ன நன்மையைச் செய்திருக்கிறேன் ?' என்று சிந்தித்துப் பாருங்கள்; 'எனது அயல் வீட்டில் விளக்கு எரியவில்லை, அவ் வீட்டுக்கு என்னுல் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும்; என்று எண்ணியவர்கள் எமது சமுதாயத்தில் விரல் விட்டு எண்ணக் கூடிய தொகையினர் தான்!

''இன்று நாம் எல்லோரும் சிந்தித்து செயலாற்ற, அயலவனை நேசிக்க, ஆதரிக்க வேண்டிய உதவிகளைச் செய்ய எமக்கு வேண்டிய உதவி, ஒத்தாசைகளைப் பெற்றுக் கொள்ள நல்லதோர் அமைப்பை இனங்கண்டிருக்கின்றேம்'' ஒருவர் பலருக்காகவும், பலர் ஒருவருக்காகவும் கூடி இயங்குகின்ற அந்த அமைப்பு தான் சிக்கன கடனுவு கூட்டுறவுச்சங்கம்''. அங்கத்தவர்களின் சமூக பொருளாதார அபிவிருத்தியை பிரதானமான நோக்கமாகக் கொண்டு இயங்குகின்ற விசேட பண்பு இந்த அமைப்பிற்கே உண்டு'' இவ்வாறு ஐம்பதிற்கும் மேம்பட்ட சிகசு சங்க பிரதி நிதிகள் கலந்து கொண்ட இக்கருத்தரங்கில் பிரதேசப் பணிப்பாளர் திரு. இராஜரெட்னம் குறிப்பிட்டார்.

## அகால மரணம்

காலி மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச கௌரவ தலைவர் திரு.பிருங்லின் நாகரத்ன அண்மையில் அகால மரணம் அடைந்தார். அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னுரின் உற்ருர், உறவினர்களுக்கு நாணயத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேம்.

## நாட்டினுடைய ..

காரணம் என்று கூறப்படுகின்றது.'' இவ்வாறு அண்மையில் கேகாலையில் அமைந்துள்ள சிக்கன கூட்டுறவு அங்கங்களின் கல்வி வளாகத்தில் இடம் பெற்ற மாவட்ட சமாசங்களின் தலைவர்கட்கான மகாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கை சிக்கண கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளன கௌரவ தலைவர்களும் இலங்கை தேசியகூட்டுறவுச் சபையின் தலைவரும் ஆசிய கடனுதவு அமைப்பின் தலைவரும் மக்கள் வங்கி இயக்குநர்சபையில் உறுப்பினருமான திரு. பீ, ஏ, கிரிவந்தனிய குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றி அவர் ''இலங்கையினுடைய இனப்பொருளாதார அபிவிருத்திக்கு சி/ க/ உ/ கூ சங்கங்கள் ஏற்றதொரு அமைப்பு ஒன்றும் இந்த அமைப்பினுடைய செயல்த் திட்டங்களிற்கு உலக நாடுகள் ஆதரவளித்து வருவதுடன் இவ் அமைப்பின் ஊடாக கிராமப்புற வறிய மக்களிற்கு உதவி செய்வதற்கான திட்டங்களை வகுப்பதில் ஆர்வம் கொண்டுள்ளன. இத்தகைய சிறப்புடன இயங்கி வரும் கி. க. கூ சங்கங்களினூடாக தேசிய மட்டத்தில் அபிவிருத்திக்கு இலக்குகளை வகுத்து நாம் செயற் படவேண்டும். இன்று நாங்கள் மக்களுக்கு பல விதமான கடன் வாய்ப்புக்களைச் செய்து வருவதை யாவரும் அறிவர். இந்த அடிப்படையில் எமது அமைப்பானது அங்கத்தவர்களுட்கு வழங்கிவரும் வாய்ப்புக்களையும் வசதிகளையும் அதிகரிப்பதற்கு எம்மத்தியில் ஏற்ற திட்டங்கள் இருத்தல் வேண்டும், அத்துடன் திட்டங்களை வகுப்பதுடன் நின்றுவிடாது அவற்றைச் செயற்படுத்துவதற்கு ஏற்ற யழிவகைகளை நாம் கையா வேண்டும்.

பத்தொன்பது மாவட்ட சமாமங்களின் தலைவர்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இம் மகாநாட்டில் ஆரம்ப சங்கங்களிலுள்ள பிரச்சினைகள், கடன் முகாமைத்துவம் வெளி நாட்டு, உள்நாட்டு நிறுவனங்களது தொடர்பு போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டன. மகாநாட்டில் இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளன பதில் முகாமையாளர் திரு. எஸ். பி. தஸநாயக்கா, இலங்கை சிக்கன கடனுதவுகூட்டுறவுச் சங்க பிராந்திய நிலையப் பணிப்பாளர் திரு. எஸ். இராஜரெட்னம் ஆசியோரும் கலந்து கொண்டனர்

## காளான் ..

என்னும் மூன்று பண்புகள் இருத்தல் அவசியம். இது போலவே இச்சங்கம் மிக உச்சப்பயன்களைப் பொது மக்கள் பெறுவதற்கு, தீமையான விளைவுகள் ஏற்படாமல் தடுக்க வல்ல நீதியான தீர்மானங்களை நிர்வாக ரீதியாக ஏற்படுத்தி வருதல் வேண்டும் கலங்காத அறிவு அன்பு நிறைந்த நெஞ்சு நீதியான தீர்மானம் ஆரோக்கியமான வாழ்வு என்னும் நான்கு குணங்கள் மனிதனைப் பூரணமாக்கி வரும் குணங்களாகும். இந் நான்கு குணங்களும் யாழ் மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசத் தலைவர் திரு எஸ். ஞானப்பிரகாசம் அவர்களிடம் காணப்படுவது போன்று ஏனைய சங்கப் பிரமுகர்களிடமும் காணப்படின் மழைக் காளான்கள் போல் சங்கங்கள் வளர இடமிருக்காது,,என்ருர்

மானிப்பாய் மெமோயறில் ஆங்கிலப் பாடசாலையில் 16. 12. 89ல் நடைபெற்ற மனிப்பாய் வடக்கு ஐக்கிய நாணய சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகக் குழு சபை உறுப்பினராக பின் வருவோர் தெரிவுசெய்யப் பட்டனர்

தலைவர்:-திரு. இ. வல்லிபுரம்
துணைத்தலைவர்:-திருமதி ச. யோகேஸ்வரன்
செயலாளர்:- திரு. பா. சபாரத்தினம்
துணைசெயலளர்:-செல்வி வ, ஜெயமதி
பொருலாளர்:-. த. சீவரெத்தினம்
நிர்வகாக் குழு:-திரு. வ. சிவயோகநாதன்
செல்வி. த. சகுந்தலா

கூட்டத்தின் இறுதி நிகழ்ச்சியாக யாழ்ப்பாண மாவட்ட சிக்கன கடனுதவுகூட்டுறவுச் சங்க சமாச இயக்குன சபை உறுப்பினர் திரு. நா. ஜீவரெட்ணம் நன்றியுரை கூறிஞர்.

## 'நாணயம்' உங்கள் வீட்டிற்கு!

நாணயம் பத்திரிகையை உங்கள் வீட்டிற்குப் பெற்றுப்படிக்க சந்தாதாரராகுங்கள்.

6 மாதம் — 12/-
1 வருடம் — 24 -

தொடர்புகட்கு:-
பத்திராதிபர்-.நாணயம்,
சி. க. கூ. பிரதேச நிலையம்,
கண்டி வீதி,
கிளிநொச்சி.

பெயர்:-.............................

முகவரி:-.............................

.............................

மாவட்டம்;-.............................

இத்துடன் 6 மாத/ 1வருட சந்தாவாக ரூபா ......
அனுப்பி வைத்துள்ளேன்.

.............................
திகதி கையொப்பம்

இப்பத்திரிகை இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத்திற்காக இல. 5/. 2-ம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள முல்லை அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.